**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 49/16 |
| Deposition of witness for | Prosecution wit. PW.4 |
| Name | கனகவல்லி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 13-07-2022

<u>முதல்விசாரணை</u>

நான் தற்போது வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகம் அம்பாசமுத்திரத்தில் மோட்டார் ஆய்வாளர் நிலை 1 ஆக பணிபுரிந்து வருகிறேன். வட்டார போக்குவரத்து அலுவலகம் திருச்செந்தூரில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 ஆக பணியில் இருந்த போது கடந்த 06.08.2015 ம் தேதியன்று செய்துங்கநல்லூர் காவல் ஆய்வாளர் வேண்டுகோளுக்கிணங்க TN 72 AA 9437 என்ற இரண்டு சக்கர வாகனத்தை அலுவலத்தில் வைத்து விபத்தாய்வு செய்தில் வாகனத்தில் கீழ்கண்ட சேதாரம் ஏற்பட்டிருந்தது. Handle bar வளைந்து காணப்பட்டது. முன்புற வலது இடது fork வளைந்தும் முகப்பு விளக்கு doom assembly சேதாரமாகியும், Handle lever mounding வலது இடது

உடைந்தும், முன்புற இடது indicator சேதாரமாகியும், கிராஸ் பார் சேதாரமாகியும், வலது foot rest சேதாரமாகியும் பின்புற வலது indicator சேதாரமாகியும் காணப்பட்டது. வாகனம் நின்ற நிலையில் ஆய்வு செய்யப்பட்டது. வாகனத்தின் கால்தடைதிறன் மற்றும் கைத்தடைதிறன் நல்ல நிலையில் இருந்தது. வாகனமானது எவ்வித இயந்திர கோளாறுனாலும் விபத்து ஏற்படவில்லை என்று சான்று வழங்கியுள்ளேன். நான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் சான்று **அ.சா.ஆ.2** ஆகும். இந்த வழக்கில் தொடர்புடைய மற்றொரு வாகனம் TN 72 AR 3837 என்ற Tourist taxi கடந்த 01.07.2015 தேதியன்று வாகனத்தை அலுவலத்தில் வைத்து விபத்தாய்வு செய்தில் வாகனத்தில் கீழ்கண்ட சேதாரம் ஏற்பட்டிருந்தது. முன்புற வலது கதவு ஒடுங்கிய நிலையிலும், பெயிண்ட் சிராய்வு ஏற்பட்டும், முன்புற வலது கதவு கண்ணாடி உடைந்து நிலையிலும், பின்புற வலது கதவு ஒடுங்கிய நிலையிலும் மற்றும் பெயிண்ட் சிராய்வு ஏற்பட்டும் முன்புற வலது சக்கர மக்காடு ஒடுங்கிய நிலையிலும் மற்றும் பெயிண்ட் சிராய்வு ஏற்பட்டுமிருந்தது. வாகனத்தின் கால்தடைதிறன் மற்றும் கைத்தடைதிறன் நல்ல நிலையில் இருந்தது. வாகனமானது எவ்வித இயந்திர கோளாறுனாலும் விபத்து ஏற்படவில்லை என்று சான்று வழங்கியுள்ளேன். நான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் சான்று **அ.சா.ஆ.3** ஆகும். காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை</u>

TN 72 AA 9437 என்ற வாகனம் விபத்து நடந்து 30 நாட்களுக்கு மேலாக தான் வாகனத்தணிக்கை செய்யப்பட்டது என்றால் சரிதான். TN 72 AR 3837 என்ற வாகனம் விபத்து நடந்து மூன்று நாட்கள் கழித்து தான்

வாகனத்தணிக்கை செய்யப்பட்டது என்றால் சரிதான்.சம்பவ இடத்தை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். சம்பவ இடத்தை பார்வையிட்டதாக நான் கொடுத்த அறிக்கையில் குறிப்பிட்டேனா என்றால் இல்லை நான் அறிக்கையில் நான் பார்வையிட்டதற்காக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தை பார்வையிடாமல் அரசிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன காலதாமதத்தின் போது மேற்சொன்ன வாகனத்தின் தன்மை மாறுபட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை